சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

சுற்றுலா

# மானியக் கோரிக்கை எண்.29

# கொள்கை விளக்க குறிப்பு

# 2014–2015

எஸ்.பி. சண்முகநாதன்
மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு
2014

# சுற்றுலா

# மானியக் கோரிக்கை எண். 29

# 2014–2015 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | சுற்றுலா– முன்னுரை | 1 |
| 2 | இந்திய சுற்றுலா – ஒரு கண்ணோட்டம் | 4 |
| 3 | தமிழக சுற்றுலா – ஒரு கண்ணோட்டம் | 4 |
| 4 | சுற்றுலா பயணிகள் வருகை | 5 |
| | ➢ தமிழ்நாட்டிற்கு சுற்றுலா பயணிகள் வருகை–வளர்ச்சி விகிதம் | 6 |
| 5 | தமிழ்நாட்டின் சுற்றுலா ஈர்ப்பு தலங்கள் | 7 |
| 6 | தமிழ்நாடு சுற்றுலா கொள்கை | 7 |
| 7 | தமிழ்நாடு– தொலைநோக்கு பார்வை 2023 (2–ம் கட்டம்) | 8 |
| 8 | மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம், திருச்சி | 10 |
| 9 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விதி 110ன் கீழ் அறிவிப்பு | 10 |
| 10 | புதிய திட்டங்கள் | 11 |
| | ➢ ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சுற்றுலாத் திட்டங்கள் | 11 |
| | ➢ 2014–15ம் ஆண்டுக்கான வளர்ச்சிக்கு அணுகுமுறை | 13 |
| | ➢ சுற்றுலா மூலதனம் மற்றும் வணிகச் சின்னத்தை பிரபலப்படுத்துதல் | 16 |
| 11 | மாநில அரசு திட்டப் பணிகள் 2013–2014 | 17 |

| | | |
|---|---|---|
| 12 | 2014–2015 ஆம் ஆண்டு பகுதி–2 திட்டங்கள் | 18 |
| 13 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 18 |
| | ➢ உணவு விடுதிகள் பிரிவு | 19 |
| | ➢ படகுக் குழாம்கள் | 20 |
| | ➢ போக்குவரத்துப் பிரிவு | 21 |
| | ➢ புதிய சுற்றுலாக்கள் தொடக்கம் | 22 |
| | ➢ பொருட்காட்சிப் பிரிவு | 23 |
| | ➢ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வர்த்தக முன்மாதிரிகள் | 24 |
| | ➢ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்னணு நிர்வாக முன்முயற்சிகள் | 25 |
| | ➢ 2013–14ம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்ட மேம்பாட்டுப் பணிகள் | 27 |
| 14 | 2014–15ம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள பெரிய முயற்சிகள் | 30 |
| 15 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய முயற்சிகள் | 34 |
| 16 | மாமல்லபுரத்தில் தமிழ்நாடு கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம் அமைத்தல் | 34 |
| 17 | நிதிநிலை செயல்பாடு | 36 |
| 18 | நிறைவுரை | 37 |

## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## சுற்றுலா

## மானியக் கோரிக்கை எண்.29

## கொள்கை விளக்கக் குறிப்பு 2014–2015

### 1. முன்னுரை

இந்தியாவின் தென்கோடிப் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு பண்டைய நாகரிகத்தின் சின்னமாக திகழ்கிறது. வங்காள விரிகுடா மற்றும் இந்தியப் பெருங்கடலை ஒட்டி 1,000 கிலோ மீட்டருக்கும் அதிகமான நீளமுடைய நெடிய கடலோரப் பகுதியைக் கொண்டது தமிழ்நாடு. பன்முகத் தன்மை கொண்ட கலாச்சாரத்தையும், மாறுபட்ட பிராந்தியத் தட்பவெப்ப நிலைகள், தாவரங்கள் மற்றும் உயிரினங்களையும் இந்த மாநிலம் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. மலைகள், பள்ளத்தாக்குகள், கடற்கரைகள், கழிமுகப் பகுதிகள், சதுப்புநிலக்காடுகள், வறண்ட விளைநிலங்கள், ஆறுகள், ஏரிகள், குளங்கள் மற்றும் பாசன டெல்டாப் பகுதிகள்

ஆகியவற்றை தமிழ்நாடு உள்ளடக்கியுள்ளது. கோவில்கள், கோட்டைகள், வனவிலங்குகள் மற்றும் பறவைகள் சரணாலயங்கள், பழங்குடி மக்களின் வசிப்பிடங்கள், மலைவாசத்தலங்கள் போன்றவை தமிழ்நாட்டின் வரலாறு, பண்டைய கலாச்சாரத்தை உணர்த்துவதுடன், நடனம், இசை, கலைகள் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் இம்மாநிலத்தின் பெருமையைப் பறைசாற்றுகின்றனர். வர்த்தகம், தொழில் மற்றும் வணிகத் துறைகளில் தலைசிறந்த உள்கட்டமைப்பு வசதிகளையும், செயல்திறன்மிக்க, கல்வியிற் சிறந்த மக்கள் தொகையையும் கொண்ட மாநிலம் தமிழ்நாடாகும். “மகிழ்வூட்டும் தமிழ்நாடு” என்ற பிரச்சாரத்தின் வாயிலாக, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தமிழ்நாட்டை சுற்றுலா மையமாகப் பிரபலப்படுத்துவது என்பதை கொள்கையாகக் கொண்டு மாநில அரசு செயல்பட்டு வருகிறது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகை நிலத் திணைகளைக் கொண்ட பகுதியாக தமிழ்நாடு திகழ்ந்ததை தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. மாநிலத்தின் தென்கோடி முனையான கன்னியாகுமரியில்

அரபிக் கடலும், வங்காள விரிகுடாவும் மற்றும் இந்திய மகா சமுத்திரமும் சங்கமிக்கும் இடம் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது. துறைமுகங்களை மேம்படுத்தி, வர்த்தக மையங்களை நவீனமயமாக்கியுள்ளதால், வர்த்தகம் மற்றும் தொழில்துறை நவீனகாலத்தில் மிகுந்த ஊக்கத்தைப் பெற்றுள்ளது. நாட்டின் இதர பகுதிகளுடனும், உலகின் பல்வேறு நாடுகளுடனும் விமானப் போக்குவரத்து, சாலைகள் மற்றும் ரயில்வே தடங்கள் மூலம் இணைக்கப்பட்டு, முக்கிய வர்த்தக பிராந்தியமாக தமிழ்நாடு தற்போது விளங்குகிறது. எனவே, “மகிழ்வூட்டும் தமிழ்நாடு” மற்றும் “தொழில்முனைப்பு மிக்க தமிழ்நாடு” ஆகிய இரண்டையும் மாண்புமிகு முதலமைச்சரின் சீரிய தலைமையில் இணைத்து தமிழ்நாட்டை முக்கிய சுற்றுலாப் பிராந்தியமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் பொதுக்கழிப்பிடம், ஓய்வுக் கூடங்கள், குடிநீர், சாலைவசதி (கடைநிலை வரை), வாகன நிறுத்தங்கள் ஏற்படுத்துதல், பூங்காக்களை உருவாக்குதல், படகுக் குழாம் மேம்பாடு, ஒளிரூட்டுதல் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை எல்லா சுற்றுலாத்தலங்களையும் மேம்படுத்தும் பணியில்

தமிழ்நாடு சுற்றுலாத் துறை ஈடுபட்டு வருகிறது. சுற்றுலாத் தலங்கள் மற்றும் அங்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, அரசின் பிறதுறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து செயல்பட அதிகபட்ச முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

**இந்திய சுற்றுலா– ஒரு கண்ணோட்டம்**

இந்தியா உலகளவில் எல்லோரும் விரும்பும் சுற்றுலா செல்லிடம் ஆக விளங்குகிறது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மிகச் சிறந்த சுற்றுலா செல்லிடமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. இந்தியாவில், நேரடியாகவோ, மறைமுகமாகவோ 7.6 விழுக்காடு வேலைவாய்ப்புகளை கடந்த 2013ம் ஆண்டில் பயணம் மற்றும் சுற்றுலா அளித்துள்ளது.

**தமிழக சுற்றுலா – ஒரு கண்ணோட்டம்**

- இந்திய அளவில் 2012ல் தமிழ்நாடு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் ஆந்திர பிரதேசத்திற்கு அடுத்தபடியாக இரண்டாமிடத்திலும், வெளிநாட்டு சுற்றுலாப்

பயணிகள் வருகையில் மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக இரண்டாமிடத்திலும் இருந்தது. 2013ல் தமிழ்நாடு **உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள்** வருகையில் **முதல்** இடத்தினை முதன்முறையாகவும், **வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள்** வருகையில் முதலிடத்திற்கு நெருங்கிய **இரண்டாம்** இடத்தையும் பெற்றுள்ளது.


- அண்மை காலங்களில் மருத்துவ சுற்றுலாவிலும் மற்றும் உடல் நலம் பேணும் சுற்றுலாவிலும் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்கி வருகின்றது.

**சுற்றுலாப் பயணிகள் வருகை**

தமிழ்நாட்டிற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, இஸ்ரேல், இத்தாலி, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, இங்கிலாந்து, ஸ்பெயின், ஸ்காண்டிநேவியா, ரஷ்யா மற்றும் மலேஷியா ஆகிய நாடுகளிலிருந்து வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பெரும் அளவில் வருகை புரிகின்றனர்.

## தமிழ்நாட்டிற்கு சுற்றுலா பயணிகள் வருகை – வளர்ச்சி விகிதம்

| ஆண்டு | உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை (இலட்சத்தில்) | வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை (இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2011 | 1367.51 | 33.08 | 1400.59 |
| 2012 | 1841.37 | 35.62 | 1876.99 |
| 2013 | 2442.32 | 39.90 | 2482.22 |



## தமிழ்நாட்டின் சுற்றுலா ஈர்ப்புத் தலங்கள்

- பாரம்பரியத் தலங்கள்
- புனிதத் தலங்கள்
- கடற்கரைகள்
- ஊரகச் சுற்றுலா
- மலை வாழிடங்கள்
- வனவிலங்கு சரணாலயங்கள்
- சாகசச் சுற்றுலா
- உடல்நலச் சுற்றுலா

## தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை (1992)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1992ம் ஆண்டு, சுற்றுலாக் கொள்கை முதலில் அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்களின் சுருக்கம் வருமாறு:

- வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையை கருத்தில் கொண்டு சுற்றுலாப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள்.

- சுற்றுலாத் துறையில் தனியார் துறையினரின் பங்களிப்பை ஊக்குவித்தல்.

- உள்ளூர் மற்றும் உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்துதல்.

- விடுதி மற்றும் சுற்றுலாத் துறையில் மனிதவளமேம்பாடு

- இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் சுற்றுலாவை மேம்படுத்தும் வண்ணம் போதிய அளவுக்கு விளம்பரம் செய்வதன் மூலம் கலாச்சாரத்தைப் பரப்புதல்.

- சுற்றுலாக் கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்தல்.

- கூடாரச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, கடற்கரைச் சுற்றுலாவை மேம்படுத்த வசதிகள் செய்தல்.

- சுற்றுலாத் தலங்கள் மற்றும் அங்குள்ள மக்களை ஒட்டுமொத்த மேம்பாடு அடையச் செய்யும் வகையில், வளர்ச்சியை மையமாகக் கொண்ட அணுகுமுறை மற்றும் சுற்றுலா வளர்ச்சியை ஒருங்கிணைத்தல்.

**தமிழ்நாடு – தொலைநோக்கு பார்வை 2023 (2–ம் கட்டம்)**

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான கொள்கைத் திட்டத்தினை (தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை **2023)** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

மார்ச் **2012**ல் தொடங்கி வைத்தார். தொலைநோக்கு ஆவணத்தின் இரண்டாம் பாகம் பிப்ரவரி **2013**ல் வெளியிடப்பட்டது. அதன்படி சுற்றுலா பிரிவுக்கு ரூ.**10,300** கோடி மூலதனம் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அம்மேம்பாட்டுத் திட்டங்கள் :–

- பொழுதுபோக்கு பூங்காக்கள்
- கடல் நீருக்கடியில் பூங்கா
- நீர்விளையாட்டு வளாகம்
- சிறப்பு சுற்றுலா மண்டலம்
- ஊரகச் சுற்றுலா மையம்
- கலாச்சாரச் சுற்றுலா மையம்
- அறிவியல் அருங்காட்சியகம்
- உலகத் தர சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் பயிற்சி நிறுவனம்
- சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பை ஏற்படுத்தும் இடங்கள் மற்றும் பண்பாட்டுத் தலங்களை மேம்படுத்துதல்

2023ம் ஆண்டில் **ஒரு கோடியே 50 லட்சம்** வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டைப் பார்வையிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம், திருச்சி**

முன்பு "உணவு தொழிற் பயிற்சி நிறுவனம்" என்று அழைக்கப்பட்ட, மத்திய மாநில அரசுகளின் ஆதரவுடன் திருச்சிராப்பள்ளி, துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்ப நிறுவனம், 1975ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விதி 110ன் கீழ் அறிவிப்பு**

திருச்சி மாவட்டம் துவாக்குடியில் செயல்படும் மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத்

தொழில்நுட்பவியல் நிறுவனத்தினை அனைத்து விதமான சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக ரூ.5 கோடியில் தரம் உயர்த்தப்படும் என விதி 110ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. ரூ.5 கோடிக்கான நிர்வாக அனுமதியும், அதில் முதற்கட்டமாக தற்போதுள்ள கட்டமைப்புகளை தரம் உயர்த்தவும் மற்றும் பயிற்சியை புதுமைப்படுத்தவும், இந்த ஆண்டுக்கு ரூ.1.33 கோடி நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**புதிய திட்டங்கள்**

**ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சுற்றுலாத் திட்டங்கள்**

ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) வழங்கும் கடன் தொகையான ரூ.450 கோடி மதிப்பீட்டில் (தோராயமாக) ஒருங்கிணைந்த சுற்றுலா கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை

இந்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இதற்காக மத்திய அரசு தேர்வு செய்துள்ள நான்கு மாநிலங்களில் (பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், தமிழ்நாடு) தமிழ்நாடும் ஒன்றாகும்.

சுற்றுலா கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் இரண்டு முன்னுரிமைச் சுற்றுகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**1. கிழக்கு கடற்கரைச் சுற்று**

அ) ஆன்மீகம் மற்றும் பாரம்பரியச் சுற்று – காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது.

ஆ) படகுக் குழாம்களையும், உதகை ஏரிப் பகுதியையும் மேம்படுத்துதல்.

**2. தென்பகுதிச் சுற்று (ஆன்மீகம் மற்றும் சுற்றுச்சூழல் சுற்று)**

புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள்.

**2014–15ம் ஆண்டுக்கான வளர்ச்சிக்கு அணுகுமுறை**

- சுற்றுலாத் தலங்களைச் சுற்றியுள்ள பகுதிகளை குப்பை கூளங்களற்ற பகுதியாகவும், தூய்மையான மற்றும் பசுமைப் பகுதியாகவும் உள்ளாட்சி அமைப்புகள் அறிவித்தல்.
- நமது தனித்துவமிக்க நாகரிகம், பாரம்பரியம் மற்றும் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு, மாநில அரசுகள், தனியார் துறைகள் மற்றும் இதர முகமைகளின் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைந்த சுற்றுலா சுற்றுக்களை உருவாக்கி மேம்படுத்துதல்.
- எல்லாக் காலநிலைக்கும், எல்லா நிதிநிலைக்கும் ஏற்ற சுற்றுலாத் தலமாக தமிழ்நாட்டை மேம்படுத்துதல்.
- உடல்நலம் பேணும் சுற்றுலாவிற்கு முக்கியத்துவம் அளித்தல்.
- சுற்றுலாவை ஒவ்வொருவரும் அனுபவித்து மகிழ்வதற்கான ஏற்பாடுகளை செய்து, அதன்வாயிலாக பொதுமக்களின் பங்களிப்பைப் பெறுதல்.
- சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பயண முகவர்கள், சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் பங்கு வகிப்பதனால்,

சந்தைப்படுத்துதல் பிரச்சாரத்தை சுற்றுலாப் பயணிகளைக் கணிசமாக அனுப்பும் வெளிநாடுகளில் நடத்துதல்.

- தமிழ்நாட்டின் தனித்துவமிக்க, தலைசிறந்த கலாச்சாரத் தொன்மையை பிரபலப்படுத்துதல்.
- சுற்றுலாப் பயணிகளின் இயல்புகளை ஆய்வு செய்து, வாடிக்கையாளரின் தேவைக்கேற்ற வகையிலான சுற்றுலாத் தொகுப்புகளைத் தயாரித்தல்.
- மொரிஷியஸ், மலேசியா மற்றும் இதர நாடுகளில் இருந்து வரும் வம்சாவளி இந்தியர்களுக்காக தாய்நாட்டின் வரவேற்பு என்ற பெயரில் சிறப்புத் தொகுப்புகளை ஏற்பாடு செய்தல்.
- நிபுணர்களின் உதவியுடன் சாகசச் சுற்றுலா, கடற்கரைச் சுற்றுலாவை பிரபலப்படுத்துதல்.
- கலை, கலாச்சாரம் மற்றும் கைவினைப் பொருட்கள், கலாச்சார சுற்றுலா என்ற பெயரில் பிரபலப்படுத்தப்படும்.

**மைஸ் சுற்றுலா (கூட்டங்கள், ஊக்கமூட்டுதல், மாநாடுகள், பொருட்காட்சிகள்)**

- “மைஸ்” (MICE) சுற்றுலாவைப் பிரபலப்படுத்துதல்– தமிழ்நாட்டில் மாநாடுகள் உலகச் சுற்றுலா கூட்டங்கள்

மற்றும் கண்காட்சிகளை நடத்துவதற்குத் தலைசிறந்த வசதிகள் உள்ளன. வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், முதலீட்டாளர்கள், நிபுணர்கள், கலைஞர்கள் ஆகியோரை ஈர்த்து, அவர்களின் தேசிய மற்றும் சர்வதேச நடவடிக்கைகளுக்கு தமிழ்நாட்டை மையமாக்கும் வகையில் மைஸ் சுற்றுலா (MICE- Meetings, Incentives, Conventions, Exhibitions) பிரபலப்படுத்தப்படும்.

- **மனிதவள மேம்பாடு –** சுற்றுலா சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில், தொழில் மற்றும் உணவுத் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களின் நிபுணத்துவத்தை பயன்படுத்தி, சம்பந்தப்பட்டவர்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் நடத்தப்படும்.
- **சுற்றுலா விளம்பரத்தில் டிஜிட்டல் / மின்னணு ஊடகம்–** மாநிலத்திற்கு மிக அதிக அளவிலான சுற்றுலாப்

பயணிகளை ஈர்க்கும் வகையில் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலம் பரந்த அளவிலான விளம்பரம் செய்யப்படும்.

**சுற்றுலா மூலதனம் மற்றும் வணிகச் சின்னத்தை பிரபலப்படுத்துதல்**

மூலதனத்தை ஈர்ப்பதற்கும், தமிழ்நாட்டை சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும் என்ற இலக்கை அடைவதற்காகவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்கீழ், தமிழ்நாடு–2023 தொலைநோக்குப் பார்வை இலக்கினை அடைவதற்கு சுற்றுலாத் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, தமிழ்நாட்டை உலகம் முழுவதும் பிரபலப்படுத்தும் வகையில் சர்வதேசப் புகழ்பெற்ற தலைசிறந்த நபர்களை விளம்பரத் தூதர்களாக சுற்றுலாத் துறை கண்டறியும்.

**மாநில அரசு திட்டப் பணிகள் 2013 – 2014**

ஆண்டிற்காண்டு தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது. 2013ல் தமிழ்நாடு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் முதலிடத்திலும் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இரண்டாவது இடத்திலும் உள்ளது. எனவே, சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி சுற்றுலாத் தலங்களை கண்டறிந்து அவ்விடங்களில் சுற்றுலா அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளான ஓய்வுக்கூடம், குடிநீர் வசதி, அணுகுசாலை, உடை மாற்றும் அறைகள், ஒப்பனை அறைகள், மின் விளக்கு வசதிகள், வாகன நிறுத்துமிடம் போன்றவை மாநில அரசு நிதியுதவியுடன் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 2013–2014ம் ஆண்டில் மாநில அரசு நிதி உதவியுடன் ரூ.1631.83 இலட்சம் மதிப்பீட்டில் பதினாறு திட்டப் பணிகள் முக்கிய சுற்றுலாத் தலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**2014–2015 ஆம் ஆண்டு பகுதி – 2 திட்டங்கள்**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை லகூன் பகுதியில் சுற்றுச் சூழல் மேம்பாட்டு பணிகள் | 117.70 |
| 2. | தமிழ்நாடு சுற்றுலா வளாகத்தில் 5 –வது மாடி கட்டுதல் | 102.00 |
| 3. | சுற்றுலா ஆணையரகம் மற்றும் மாவட்ட சுற்றுலா அலுவலகங்களில் மின் ஆளுமையை நடைமுறைப்படுத்துதல், கணினி மற்றும் இதர சாதனங்கள் வாங்குதல் | 14.00 |
| | **மொத்தம்** | **233.70** |

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பெரிய சுற்றுலாத் தலங்களிலும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் **30.6.1971** அன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உருவாக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் விரைந்த முன்னேற்றம் கண்டிருப்பதுடன், தற்போது **55** தொடர் தங்கும் விடுதிகள் மற்றும் **17** சொகுசுப்

பேருந்துகளுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் செயல்பட்டு வருகிறது. உதகை, கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலைவாசத்தலங்களில் இளைஞர் விடுதிகளை ஏற்படுத்தி, அங்கு சுற்றுலாப் பயணிகளுக்கு குறைந்த செலவில் தங்கும் வசதிகள் அளிக்கப்படுகிறது. சில விடுதிகள் கடந்தகாலங்களில் குத்தகைக்கு விடப்பட்ட நிலையில், இதர விடுதிகள் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**உணவு விடுதிகள் பிரிவு**

கடந்த மூன்று ஆண்டுகளில் 12 தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவு விடுதிகள் தரம் உயர்த்தப்பட்டன. கட்டட வடிவமைப்பு வல்லுநர்களின் உதவியுடன் மீதமுள்ள உணவு விடுதிகளையும் தேவைக்கேற்ப தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் உணவு மற்றும் பானம் தயாரிக்கும் ஊழியர்களுக்கும், இதர

சேவைப் பணியாளர்களுக்கும், சென்னை தரமணியில் அமைந்துள்ள உணவக மேலாண்மை, சமையல் கலை மற்றும் ஊட்டநெறி தொழில்நுட்பக் கல்லூரியின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. விடுதித் துறை நிபுணர்களை வரவழைத்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளின் ஊழியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 2014–15ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

**படகுக் குழாம்கள்**

முட்டுக்காடு, முதலியார்குப்பம், பிச்சாவரம், ஏற்காடு, கொடைக்கானல், குற்றாலம், உதகமண்டலம், பைக்காரா ஆகிய இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகுக் குழாம்களை இயக்கி வருகிறது.

முட்டுக்காடு மற்றும் முதலியார்குப்பம் ஆகிய இடங்களில் உள்ள படகுக் குழாம்களில் கூடுதல் வருவாயை

ஈட்டும் வகையில் நான்கு புதிய வாட்டர் ஸ்கூட்டர்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று பைக்காராவில் உள்ள படகுக் குழாமில் பயன்படுத்துவதற்காக இரண்டு அதிவிரைவு படகுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

படகுக் குழாம்களில் கூடுதலாக சேர்க்கப்பட்ட அம்சங்களால் சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக இளைஞர்கள் ஈர்க்கப்பட்டனர்.

**போக்குவரத்துப் பிரிவு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தன்வசமுள்ள 17 சொகுசுப் பேருந்துகளைப் பயன்படுத்தி அரை நாள் முதல் 15 நாட்கள் வரையிலான சுற்றுலாக்களை இயக்கி வருகிறது. சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 30க்கும் மேற்பட்ட சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து வருகிறது. அரசு ஊழியர்கள் தங்கள் விடுப்புக்

கால பயணச் சலுகையை பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விடுப்புக் கால பயணச் சலுகைக்கான சுற்றுலாக்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலாக்கள் தவிர, பிரத்யேக குழுச் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் சுற்றுலாக்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்து வருகிறது.

**புதிய சுற்றுலாக்கள் தொடக்கம்**

2013–14ம் ஆண்டில் கீழ்க்காணும் புதிய சுற்றுலாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன:

- வண்டலூர் உயிரியல் பூங்கா, கலங்கரை விளக்கம் ஒருநாள் சுற்றுலா
- கோனே நீர்வீழ்ச்சி ஒருநாள் சுற்றுலா
- கடற்கரை மற்றும் தீவு ஒருநாள் சுற்றுலா (முதலியார்குப்பம்)
- ஒருநாள் கிருத்திகைச் சுற்றுலா
- 5 நாட்கள் மலைநாட்டுத் திருப்பதி சுற்றுலா

**பொருட்காட்சிப் பிரிவு**

**40**வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி கடந்த **6.1.2014** அன்று தொடங்கிவைக்கப்பட்டது. 'சுற்றுலாவும் தண்ணீரும்– நமது பொது எதிர்காலத்தைப் பாதுகாப்போம்' என்ற கருப்பொருளை இந்தப் பொருட்காட்சி மையமாகக் கொண்டிருந்தது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு பொருட்காட்சியில் ரூ.**3.80** கோடி நிகரலாபம் கிடைத்தது. கடந்த ஆண்டில் நடைபெற்ற பொருட்காட்சியில் ரூ.**2.90** கோடி மட்டுமே லாபம் ஈட்ட முடிந்தது. பார்வையாளர்களுக்கு உகந்த வகையில் பொருட்காட்சி நடைபெறும் இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாநில அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை வெளிப்படுத்தும் வகையில், அனைத்துத் துறைகள் சார்பிலும் கவர்ந்திழுக்கும் வகையில் பணிசெய்யும் மாதிரிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்தப் பொருட்காட்சியில் சுற்றுலாத் துறையின் சார்பில், மாமல்லபுரம் கடல்சார் அருங்காட்சியகத்தில்

வைக்கப்பட உள்ள ஓய்வுபெற்ற ஐ.என்.எஸ்.வாக்லி நீர்மூழ்கிக் கப்பலின் மாதிரி அமைக்கப்பட்டிருந்தது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வர்த்தக முன்மாதிரிகள்**

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் மற்றும் சுற்றுலாப் பயணங்கள் குறித்து கூகுள் வலைதளம் மூலம் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. இந்தியா தவிர, அமெரிக்கா, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளிலும் இந்த விளம்பரம் இணைக்கப்பட்டிருந்தது.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் மற்றும் சுற்றுலாத் தொகுப்புகள் குறித்த விளம்பரங்கள் ஒரு லட்சம் வாடிக்கையாளர்களைச் சென்றடையும் வகையில் குறுஞ்செய்தி (எஸ்.எம்.எஸ்.) செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற முன்முயற்சிகளுக்கு பெரிய அளவில் வரவேற்பு கிடைத்துள்ளது.

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் மற்றும் சுற்றுலாப் பயணங்கள் குறித்து ஃபேஸ் புக் சமூக

வலைதளத்தில் விளம்பரங்களை வெளியிட உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த விளம்பரங்கள் மிக விரைவில் வெளியிடப்பட உள்ளன.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மின்னணு நிர்வாக முன்முயற்சிகள்**

மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்தான் பயணங்கள் மற்றும் விடுதிகளுக்கு இணையதள முன்பதிவு வசதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி அறிமுகப்படுத்தியது. கடந்த 2004 ஜூலை மாதம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதனைத் தொடங்கி வைத்தார்கள். பயணங்கள் மற்றும் விடுதிகளுக்கான முன்பதிவு வசதியை இணையதளம் மூலம் வழங்கியதன் வாயிலாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் தனது வருவாயை அதிகரிக்க முடிந்தது.

கடந்த **27** செப்டம்பர் **2012** அன்று உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் மற்றும் பயணங்களுக்கு அலைபேசி மூலம் முன்பதிவு வசதியைத் தொடங்கி வைத்தார்கள். அனைத்து அலைபேசி இயக்குவோர் தொடர்புகள் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் மற்றும் பயணங்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள இந்த வசதி பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

இணையதள முன்பதிவு மூலம் வரலாறு காணாத அளவுக்கு கடந்த **2013–14**ம் ஆண்டில் ரூ.**776** இலட்சம் வருவாயை ஈட்ட முடிந்தது. இது கடந்த **2012–13**ம் ஆண்டு கிடைத்த ரூ.**535** இலட்சம் வருவாயுடன் ஒப்பிடுகையில் **45** விழுக்காடு உயர்வாகும்.

மாமல்லபுரம், உதகை, கொடைக்கானல், கோயம்புத்தூர், மதுரை (அலகு இரண்டு) ஆகிய இடங்களில் உள்ள ஐந்து பெரிய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் wi-fi (கம்பியில்லா இணையதள வசதி) இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வரவேற்பைப் பொறுத்து இதர தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளிலும் இந்த வசதி படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

## 2013–14ம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொண்ட மேம்பாட்டுப் பணிகள்

1. உதகையில் உள்ள படகுக் குழாம், கட்டடக்கலை நிபுணர்களின் உதவியுடன் முழுமையான கண்ணோட்டத்துடன் வடிவமைக்கப்பட்டு ரூ.5.30 கோடி செலவில் தரம் உயர்த்தப்படுகிறது. இதற்கான பணிகளுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்கள் கடந்த 2013 டிசம்பர் மாதம் அடிக்கல் நாட்டியுள்ளார். தற்போது நடைபெற்று வரும் தரம் உயர்த்தும் பணிகள் 2014 செப்டம்பர் மாதத்திற்குள் நிறைவடையும். தரம் உயர்த்தப்பட்ட பின்னர், இந்த படகுக் குழாம் உதகைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கு விருந்தாக அமையும்.

2. 250 கி.வோ. மின் திறன் கொண்ட ஐந்து ஜெனரேட்டர்கள், 200 கி.வோ. மின் திறன் கொண்ட மூன்று ஜெனரேட்டர்கள், 125 கி.வோ. மின் திறன் கொண்ட ஒரு ஜெனரேட்டர், 62.5 கி.வோ. மின்திறன் கொண்ட ஒரு ஜெனரேட்டர் ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 10 விடுதிகளில் ரூ.1.92 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

**3.** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் ஏற்கெனவே இருந்த பழைய கட்டில்களுக்கு பதிலாக, டான்சி நிறுவனத்திடம் இருந்து ரூ.**52** இலட்சம் செலவில் **326** தேக்கு மரக் கட்டில்கள் கொள்முதல் செய்யப்பட்டு கட்டில்கள் மாற்றப்பட்டன.

**4.** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் உள்ள அனைத்து பழைய படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணைகளுக்கு பதிலாக, ரூ.**85** இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட **534** ஃபோம் மெத்தைகள் மற்றும் **858** ஃபோம் தலையணைகள் மாற்றப்பட்டன.

**5.** ரூ.**26** இலட்சம் செலவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பெரிய விடுதிகளில் பயன்படுத்துவதற்காக நவீன மரத்தளவாடங்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

**6.** திருச்சியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் ரூ.**19** இலட்சம் செலவில் பயணிகள் மின்தூக்கி நிறுவப்பட்டுள்ளது.

7. உதகை, ஏற்காடு, ராமேஸ்வரம், கிருஷ்ணகிரி, கொடைக்கானல் என தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 5 பெரிய விடுதிகளில் பயன்படுத்துவதற்காக ரூ.77 இலட்சம் செலவில் நவீன சமையல் உபகரணங்கள் வாங்கப்பட்டு நிறுவப்பட்டன.

8. பழைய சொகுசுப் பேருந்துகளை மாற்றிவிட்டு அவற்றுக்கு பதிலாக, 18 இருக்கைகளைக் கொண்ட இரண்டு குளிர்சாதன சொகுசுப் பேருந்துகளும், ஒரு வால்வோ பேருந்தும் ரூ.117 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

## 2014–15ம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள பெரிய முயற்சிகள்

1. ரூ.95 இலட்சம் செலவில் கொடைக்கானலில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதி 28 அறைகளைக் கொண்டதாக தரம் உயர்த்தப்படும்.

2. ரூ.70 இலட்சம் செலவில் திருச்செந்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதி 10 அறைகளைக் கொண்டதாக தரம் உயர்த்தப்படுவதுடன், அங்குள்ள மாநாட்டு அறை 3 குடும்ப அறைகளாகவும் மாற்றப்படும்.
3. ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் திருச்செந்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் உள்ள 15 குடில்கள் புதுப்பிக்கப்படும்.
4. ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில், ஏற்காட்டில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் 15 குடில்கள் தரம் உயர்த்தப்படும்.
5. ஒகேனக்கல்லில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் மதுபானக்கூடம் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.
6. குற்றாலத்தில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் உள்ள 12 அறைகள் ரூ.30 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்படும்.
7. உதகையில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியின் 36 அறைகளும், தாழ்வாரமும் ரூ.116 இலட்சத்தில் தரம் உயர்த்தப்படும்.

8. உதகையில் உள்ள இளைஞர் விடுதி ரூ.41 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்படும்.

9. ஒகேனக்கல்லில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியின் 17 அறைகள் ரூ.40 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்படும்.

10. திருவண்ணாமலையில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் ரூ.42 இலட்சம் செலவில் புதிய உணவகம் அமைக்கப்படும்.

11. திருவண்ணாமலையில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் ரூ.20 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.

12. ஒசூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் ரூ.40 இலட்சம் செலவில் மாநாட்டு அறை புதிதாகக் கட்டப்படும்.

13. திருச்செந்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் சுற்றுச்சுவர் ரூ.17.20 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

14. ரூ.25 இலட்சம் செலவில் திருச்செந்தூரில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு விடுதியில் மின்தூக்கி அமைக்கப்படும்.

15. ஊட்டி தாவரவியல் பூங்காவில் உள்ள சிற்றுண்டிக் கூடம் ரூ.35 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

16. தொட்டபெட்டா தொலைநோக்கிக் கூடம் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

17. தொட்டபெட்டா தொலைநோக்கி இல்லத்தில் ரூ.15 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஊட்டி படகு இல்லத்தில் ரூ.33 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

18. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 5 சொகுசுப் பேருந்துகள் ரூ.170 இலட்சத்தில் வாங்கப்படும்.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய முயற்சிகள்**

- தனியார் பங்களிப்புடன் தேவை அடிப்படையில் மாவட்டங்களில் புதிய சுற்றுலாக்களை அறிமுகம் செய்வது குறித்து பரிசீலிக்கப்படும்.
- மாநிலத்தில் குறிப்பிட்ட இடங்களில் துரித உணவகங்களை அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாமல்லபுரத்தில் தமிழ்நாடு கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம் அமைத்தல்**

இந்திய கடற்படையில் ஓய்வுபெற்ற ஐ.என்.எஸ்.வாக்லி நீர்மூழ்கிக் கப்பலை மையமாகக் கொண்டு, காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் தமிழ்நாடு கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தை அமைக்க அரசாணை பிறப்பித்துள்ளது. மாமல்லபுரம் தமிழ்நாடு கடல்சார் பாரம்பரிய

அருங்காட்சியகத்தில் அமைக்கப்படவுள்ள கலை பொருட்களை தொகுத்தல், அழகான வகையில் காட்சிப்படுத்துதல், விளக்கக்குறிப்பு, கையேடுகள், செய்தி குறிப்புகள், வழிகாட்டி புத்தகங்கள் ஆகியவற்றை தயாரித்து காட்சிப்படுத்துதல் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் தொடர்பான திட்டத்தினை செயல்படுத்துவதற்கு செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம் தொடர்பான முதல் செயற்குழு கூட்டம் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் **19–11–2013** அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அருங்காட்சியக நிபுணர்கள், கடற்படை அலுவலர்கள், துறைமுக அலுவலர்கள் மற்றும் தேசிய அறிவியல் அருங்காட்சியக அறிவியலாளர்கள் போன்றவர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் காட்சிப்படுத்தும் பொருட்களின் கருப்பொருள், அதன் வரலாற்று கருத்தாக்கம், நடைபெற்ற

கால வரையறை மற்றும் அதன் பல்வேறு வகைகள் என தனித்தனியே பிரித்து, தொகுத்து அமைப்பது குறித்து முடிவு செய்யப்பட்டது.

**நிதிநிலை செயல்பாடு**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிதிநிலைமை கடந்த மூன்று ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. அதுகுறித்த விவரம் வருமாறு:

| ஆண்டு | வருவாய் | நிகர இலாபம் |
|---|---|---|
| | (ரூ. கோடியில்) | |
| 2008–09 | 70.25 | 2.25 |
| 2009–10 | 78.13 | 3.66 |
| 2010–11 | 92.72 | 2.64 |
| 2011–12 | 102.34 | 13.50 |
| 2012–13 | 106.59 | 16.26 |
| 2013–14 (உத்தேச மதிப்பீடு) | 108.76 | 11.95 |

**நிறைவுரை**

உலகம் ஒரு கிராமமாக ஆன நவீன கால கட்டத்தில், புதிய சிந்தனைகளை எல்லா தரப்பிலிருந்தும் வரவேற்பதற்கு இதுவே சரியான நேரம். தமிழர்களின் இயற்கையான அணுகுமுறை '**யாதும் ஊரே யாவரும் கேளீர்**' என்ற சொற்றொடருக்கு ஏற்ப, எல்லா ஊர்களும் நமது ஊர், ஒவ்வொரு நபரையும் நமது சொந்தபந்தம் எனக் கருதுவது பண்டைய தமிழர் கலாச்சாரம். இந்த உணர்வினைக் கொண்டு சுற்றுலாத்துறை, சுற்றுலாவை பிரபலப்படுத்தி வருகிறது. இதனால் **2013**ல், **உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள்** வருகையில் தமிழ்நாடு முதல்முறையாக **முதல் இடம்** பெற்றுள்ளது. மேலும், **வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்** வருகையில் தமிழ்நாடு முதலிடத்திற்கு நெருங்கிய **இரண்டாம் இடத்தைப்** பெற்றுள்ளது. விரைவில் இரண்டு கூறுகளிலும் முதலிடம் பெறுவதற்கு முயற்சிப்போம்.

எஸ்.பி.சண்முகநாதன்
சுற்றுலாத்துறை அமைச்சர்